கிராமியக் கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்திற்கான உலக வங்கியின் உதவி

543— (*வினா எண். 17522)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமியக் கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமியக் கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு உலக வங்கியின் கடன் உதவி கேட்கவில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடன் உதவி கேட்கவில்லை என்றாலும், இந்த வீடு கட்டும் திட்டத்தை அரசே தனது சொந்த நிதியிலிருந்து செயல்படுத்தி வருவதாக அமைச்சருடைய பதில் மூலம் நான் ஊகிக்கிறேன். எனவே, இந்தத் திட்டத்திற்கு, இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கீடு, அரசு செய்துள்ளது என்ற அந்த விவரத்தையும், 1984–85 ஆம் ஆண்டுக்கு எத்தனை வீடுகள் கட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்ற அந்த விவரத்தையும், அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

மாணபுமிகு திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற அடிப்படையில் மாநில அரசின் பங்காக 1,500 ரூபாயும் ஹட்கோவினுடைய பங்குகாக 3,000 ரூபாயும் மீதம் இருக்கிற 1,500 ரூபாயை வீடு கட்டுகிறவர்கள் உழைப்பைவைத்து கட்டுமானப் பொருட்களை வைத்துக் கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதை 5 ஆண்டுத் திட்டமாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகின்றன.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு கிராமப்புற வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக 40 ஆயிரம் வீடுகள் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த வீடுகள் கட்டப்படுவதற்காக வழங்கப்படுகிற மொத்தத் தொகை எவ்வளவு ? தற்போது வழங்கப்படுகிற தொகை விலைவாசிக்கேற்ப போதுமானதாக இல்லாத காரணத்தினால் அதை அதிகப்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கு 6 ஆயிரம் ரூபாய் 3 ஆயிரம் ரூபாய் ஹட்கோ கடனாகவும் 1,500 ரூபாய் மாநில அரசின் பங்கு கடனாகவும் 1,500 ரூபாய் அவர்களுடைய உழைப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இருக்கிறநிலை. அதே நிலையில் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் அந்தத் தொகையிலே மாநில அரசு இனாமாக வழங்குகிறது ; ஆதி திராவிடர்கள் வசிக்கிற இடங்களில் ஆதிதிராவிடர்கள் அல்லாதவர்கள் போய் குடியிருந்து வீடு கட்டுவதற்கு அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் இனாமாக வழங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த 40 ஆயிரம் வீடுகட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. 5 ஆண்டுகள் இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஆசைபடுவதைப்போன்று தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றால் 40 ஆயிரம் வீடுகள் என்பது குறைந்துவிடும். ஆகவே, அது இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலில் 4,500 ரூபாய் தான் கொடுக்கிறோம் பாக்கியை அந்த பெனிபிசியரிஸ், அதனால் யார் யார் பயன் அடைகிறார்களோ அவர்களே போட்டு கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். என். ஆர். இ. பி. இல் செய்யக்கூடிய வேலைகளிலே அரிசனங்களுக்காக குறைந்த அளவிலே தான் ஒதுக்கப்பட்டு வந்தது. அதை எப்படி அதிகப்படுத்தியிருக்கிறார்களோ—6 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள் —அதைப்போன்று இதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். இப்போது பயன் அடைகிறவர்கள் 1,500 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள், அவர்களால் அதைக் கட்ட முடியாது. ஆகவே அரசாங்கமே ஏற்றுக்கொண்டு இந்த 40 ஆயிரம் வீடுகளுக்கு 60 ஆயிரம் ரூபாய்தான் கூடுதலாக ஆகும், ஆகவே அந்த 1,500 ரூபாயை கடனாக அவர்களுக்குக் கொடுத்து உதவ அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஆதிதிராவிட மக்களுக்கு அதிகமாக உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கைகளை வைக்கிற அடிப்படையில் அந்த நிலையை அரசு உணர்ந்து தான் அரசு ஆதி திராவிடர்களுக்கு அதிகமாகச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் அந்த ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால அவர்கள் 1,500 ரூபாய் கட்டவேண்டுமென்ற நிலையை மாற்றி அதையும் அரசு மானியமாகத் தரவேண்டுமென்ற அந்தக் கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியதுதான். ஆதி திராவிடர்கள் என்று சொல்கிற நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு திட்டங்கள் மூலமாக ஆதிதிராவிடர்களுக்கு உதவ வேண்டுமென்று உணர்வோடு இருக்கிற காரணத்தினால் அதை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய முடியுமா என்பதை நான் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, அரசு ஆதிதிராவிட மக்களுக்கு குடியிருப்புவீடு கட்டும் திட்டத்தை 1978 ஆம் ஆண்டிலிருந்து கைவிட்டுவிட்டது. கிராமப்புற கூட்டுறவு சங்கம் மூலமாக வீடுகள் கட்டப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாயாவது அந்த சங்கத்திற்கு ஒதுக்கி அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திட்டத்தைக் கைவிட்டதாகச் சொன்னார்கள். திட்டத்தைப் பொறுத்தவரையில் கைவிடவில்லை. திட்டத்தினுடைய நிலையை பல்வேறு வகையிலே மாற்றி ஆதிதிராவிடர்களுக்கு பணிகளைச் செய்கிற வகையிலே எந்த வகையிலும் குறைவு ஏற்படாத அளவுக்கு காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னும் அதிகமாக அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் எந்த எந்த வகையிலே செய்ய வேண்டுமோ அந்த அந்த வகையிலே நிச்சயமாகச் செய்வோம். அதிலே அவர்களுக்குச் சந்தேகம் வேண்டியதில்லை. இத்திட்டத்தில் அல்ல, எந்தத் திட்டமாக இருந்தாலும் அவர்களுக்குச் செய்ய வேண்டிய சலுகைகள் தரப்படும், எந்த வகையிலும் நிச்சயமாக நிறுத்தப்படமாட்டாது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது நிதி ஒதுக்குகிறதா? அது அல்லாமல் வீடு கட்டுவதற்கு பல்வேறு கூட்டுறவு சங்கங்களுக்களுக்கு விண்ணப்பிக்கின்றபோது அவர்கள் நிதி இல்லை என்று சொல்கிற ஒரு பிரச்சினை இருக்கிறது. ஆகவே வருகின்ற விண்ணப்பங்களுக்கு தகுந்தாற்போல் வீடு கட்டுவதற்கு உண்டான தொகையை ஒதுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஹட்கோ உதவியுடன் 3 ஆயிரம் ரூபாய் அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் வருகின்றன. அப்படி விண்ணப்பங்கள் வருவதற்குக் காரணம் இந்த திட்டத்தில் வீடு கட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடத்தில் அதிகமாகவே இருக்கிறது. அதை பயன்படுத்தி எந்த அளவுக்கு ஒவ்வொரு பகுதிக்கும் வழங்க முடியுமோ அந்த அளவுக்கு வழங்குகிறோம். ஆண்டுக்கு 40 ஆயிரம் வீடுகள் தான் என்ற நிலை இருக்கிற காரணமாக எல்லா மனுக்களையும் பரிசீலித்து உடனடியாக தர முடிவது இல்லை. ஹட்கோ மூலமாக 40 ஆயிரம் வீடுகள் என்று அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஹட்கோவை வற்புறுத்தி இன்னும் அதிகமாக வாங்கிக் கொடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் முயல்வார்களானால் நாங்களும் அதற்குத் துணையாக இருப்போம்.